IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

I.A.2/2023 in OS.No. 24/2016

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணி | Caste | : | |
| Father Name | : | கண்ணன் | Calling | : | |
| Village | : | மாதாண்டகுப்பம் | Religion | : | |
| Town | : | காட்பாடி தாலுக்கா | Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of April, 2025.

Chief Examination:

நான் இம்மனுவில் மனுதாரர். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். படித்துப்பார்த்தேன். சரியாக இருந்தது. கையொப்பம் செய்தேன். எனது தரப்பு ஆவணங்கள்.

1. என் மகள் சந்தியாவின் சந்தேக மரணத்திற்கு பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரின் உண்மை நகல்கள் ம.சா.ஆ.1 ஆகும்.

2. என் மகள் சந்தியா இறந்ததற்கு பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆகும்.

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு தமிழ் படிக்கத் தெரியாது. கையெழுத்து மட்டும் தமிழில் போடுவேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு எந்த தேதியில் அடிபட்டது என்றும் எந்த தேதியில் அதற்காக மருத்துவ சிகிச்சை பெற்றேன் என்றும் எனது

முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2. நான் எந்த ஊரில் யார் வீட்டில் கொத்தனார் வேலை செய்யும்போது எனக்கு அடிபட்டது என்றால் மாதாண்டகுப்பம் காட்டூரில் உள்ள பிள்ளையார் தெருவில் உள்ள கோவிலுக்கு அருகில் பெருமாள் வீட்டில் வேலை செய்யும் போது எனக்கு அடிபட்டது.

3. நான் சென்னையில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக கூறியுள்ள நிலையில் எத்தனை நாட்கள் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றால் 10 நாட்களுக்கு மேல் இருக்கும்.

4. சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பின்பு இதுநாள் வரை வேலைக்கு செல்கிறேனா என்றால் கொத்தனார் வேலை செய்யவில்லை, வீட்டில் இருந்துகொண்டு விவசாய வேலை செய்கிறேன். நான் தாக்கல் செய்த அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எத்தனை நாட்கள் கழித்து எனக்கு தெரியவந்தது என்றால் மருத்துவமனை சிகிச்சை முடித்து வீடு திரும்பிய 10 நாட்கள் கழித்து எனக்கு தெரியவந்தது. சாட்சி தற்போது மாற்றி என் மகள் இறந்தபின்பு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் தெரியவந்ததாக கூறுகிறார்.

5. 2019 ல் என் மகள் இறந்துவிட்ட பின்பு இவ்வழக்கு தள்ளுபடி ஆன விவரம் எனக்கு தெரியவந்ததாக நான் கூறுகிறேன் என்றால், என் மகள் 2019 ல் இறந்து ஒரு மாதம் கழித்து எனக்கு தெரியவந்தது. அவ்வாறு தள்ளுபடி ஆன விவரம் நான் குறிப்பிட்டுள்ளதுபோல் 2019 ல் தெரியவந்தும் தற்போதைய இம்மனுவை 1143 நாட்கள் காலதாமதமாக

வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அடிபட்டதால் என்னால் நடக்க இயலாததாலும் என் மகளும் இறந்துவிட்ட காரணத்தினால் மன உளைச்சலில் இருந்ததாலும் என்னால் உடனடியாக மனு செய்ய முடியவில்லை.

6. தள்ளுபடியான எனது வழக்கை மீண்டும் நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ள இம்மனுவில் நியாயமான காரணங்கள் எதுவும் குறிப்பிடாததால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை=இல்லை.

(Sd/-)..K.Venkatesan
DISTRICT MUNSIF
KATPADI